1996 ஆகஸ்ட் 10] [கலைஞர் மு. கருணாநிதி]

அது சரியல்ல. அவர் கவனம் செலுத்துவதும், நான் கவனம் செலுத்துவதும் ஒரு கூட்டுமுயற்சிதான். இந்த அமைச்சரவையில் யார் கவனம் செலுத்தினாலும் அது ஒரு கூட்டுமுயற்சிதான். கோவையிலே மாத்திரமல்ல, பல பகுதிகளில் இந்த நடைபாதைக் கடைகளுக்கும் போக்குவரத்திற்கும் இடையிலே பல தகராறுகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. சில இடங்களில் காவல்துறையினர் நடைபாதை வியாபாரிகளை அதிகத் துன்பத்துக்கு உள்ளாக்குகிறார்கள் என்பதும் தெரிகிறது. சில இடங்களில் கட்டுப்பாட்டை மீறி, வரையறுக்கப்பட்ட நிலைகளுக்கு மாறாக நடைபாதை வியாபாரிகளும் நடந்துகொள்கிறார்கள். எனவே, நிச்சயமாக இரண்டையும் ஒருங்கே சேர்த்து உட்கார்ந்து பேசி, நல்ல முடிவு காண அரசு தயாராக இருக்கின்றது. அதுவரையில் காவல் துறையின் மூலமாக எந்தச் சங்கடமும் வராமல் இருக்க காவல் துறைக்கும் இந்த அவையின் மூலமாக நான் எச்சரிக்கை விடுக்கிறேன்.

முற்பகல் 10-50

(ஆ) கன்னியாகுமரி மாவட்ட கடலோர வீடுகள் பல கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டுள்ளமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. மணி, திரு. இரா. பென்னார்டு, திரு. அ.வ. அப்துல் நாசர், திரு. இரா. தாமரைக்கனி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினை மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். அவர்கள் ஆறு பேரில் ஒருவர் முதலில் பேசினால் போதும் என்று கருதுகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்களை அழைக்கின்றேன்.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்ட கடலோர கிராமப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பால் பல வீடுகள் முழுமையாக பாதிக்கப்பட்டதால் அப்பகுதி மீனவ மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

[1996 ஆகஸ்ட் 10

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் தொகுதி மண்டைக்காட்டு புதூர், விளவங்கோடு தொகுதி, வள்ளவிளை, மார்த்தாண்டம் துறை ஆகிய பகுதிகளில் உள்ள மீனவர் வீடுகள் கடந்த 28-7-96, 29-7-96 மற்றும் 30-7-96-ஆம் தேதிகளில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால் பழுதடைந்ததை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்ற துறையின் அதிகாரிகளுடன் பார்வையிட்டு உடனடி நிவாரணமாக ரூ. 43,500 வழங்கியுள்ளார். பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வேட்டி மற்றும் சேலைகள் வழங்க கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்துள்ளார். இதுவரை விளவங்கோடு தாலுக்காவிற்கு உட்பட்ட நீரோடித்துறை கிராமத்தில் 210 மீட்டர் நீளத்திற்கு தடுப்புச் சுவர் (Rubble Mound Wall) எழுப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கல்குளம் தாலுக்காவிற்கு உட்பட்ட மண்டைக்காட்டுபுதூர் கிராமத்தில் ஒரு வார காலத்தில் தடுப்புச் சுவர் (Rubble Mound Wall) எழுப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மீனவர்களுக்கு இலவசமாக வீடு கட்டி வழங்கும் திட்டத்தின் கீழ் தேவையான நிலத்தினை மீன்வளத்துறையிடம் மீனவர்கள் ஒப்படைத்தால் அவர்களுக்கு ரூ. 26,000 செலவில் வீடுகள் கட்டி வழங்கப்படும். அதனடிப்படையில் கடல் கொந்தளிப்பு காரணமாக வீடுகள் இழந்து பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு முன்னுரிமை வழங்கி வீடுகள் கட்டித் தரப்படும். கடற்கரையில் இருந்து சுமார் 200 மீட்டர் தொலைவில் வீடுகள் கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பின் அது குறித்தும் ஆராயப்படும்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பாக ஆனி, ஆடி மாதங்களில் கடல் கொந்தளிப்பினால் கன்னியாகுமரியிலிருந்து ஆரம்பித்து குளச்சல், நீரோடித்துறை வரையில் இந்த வருடத்தில் மட்டும் இரண்டு முறை ஏராளமான மீனவர்களுடைய வீடுகள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. விவர அறிக்கையிலே அங்கிருக்கிற

1996 ஆகஸ்ட் 10] [திரு. டி. மணி]

மாவட்ட ஆட்சித் தலைவரும், அதிகாரிகளும் உடனே தலையிட்டு போதிய நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருப்பது பாராட்டுக்குரியது. அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த இரண்டு மாதங்களில் இரண்டாவது முறையாக இப்படிப்பட்ட இயற்கையின் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. எனவே, முழுமையான பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு தூண்டில் வளைவு அமைப்பதன் மூலம் கடல் அரிப்பை தடுக்க முடியுமே தவிர வேறொன்றுமில்லை. ஆனால் அங்கே கடலில் கல்லைப் போடுகிற நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு வேடிக்கையான நடவடிக்கையாகும். கடலில் கல்லைப் போடுவதற்கு ஒரு பகுதியை குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி நீரோடித்துறையினுடைய மேற்குப் பகுதி. கடந்த மாதம் நாகர்கோவிலுக்கு உறுதிமொழிக் குழு வந்திருந்தபோது இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்கப்பட்டது. சில அதிகாரிகளும் வந்திருந்தார்கள். அவர்கள் பொதுப்பணித் துறையைச் சேர்ந்தவர்கள் என்று நினைக்கிறேன். அப்போது அந்த அதிகாரிகள் கல்லைப் போடும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று அடித்துச் சொன்னார்கள். ஆனால் நான் இரண்டு நாட்களுக்கு முன்பு அந்தப் பகுதிக்கும் போய் இருந்தேன். நான் அவர்களிடம் சொன்னேன், வேலை நடப்பதாகத் தெரியவில்லை என்று. அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. 1-ஆம் தேதி உறுதிமொழிக் குழுக் கூட்டம் நடந்தது. நான் 2-ஆம் தேதி அந்த ஊருக்குச் சென்று பார்க்கிறபோது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, சொல்லிவிடுகிறேன். அப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றதாகத் தெரியவில்லை. 3ஆம் தேதி நான் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தகவல் கொடுத்து மாவட்ட ஆட்சியர் வந்து பார்க்கிறபோது கல் போடுகின்ற பணி நடைபெற்றதாகத் தெரியவில்லை என்று தெரிந்தது. தவறான தகவலை உறுதிமொழிக் குழு முன்பு, மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு தந்து, வேலை நடைபெறுவதாகக் கூறியிருக்கிறார்கள். வேலை நடந்தால் நல்லது. எனக்கு அதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. இப்போதுகூட சந்தேகத்திற்குரிய விஷயம் என்னவென்றால், கல்லைப் போடுவதால் மட்டுமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

ஆகவே என்னுடைய வேண்டுகோளும், கோரிக்கையும் என்னவென்றால், கொஞ்சம் பணம் அதிகம் செலவானாலும் அந்த மாவட்டத்தில் 6, 7 இடங்களில் தூண்டில் வளைவு போடுவதால் மட்டும்தான் அந்த மீனவ மக்களை கடல் அரிப்பு கொடுமையிலிருந்து காப்பாற்ற முடியும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. பெர்னார்டு.

முற்பகல் 10–55

திரு. இரா. பெர்னார்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியவர் மணி அவர்கள், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து வரவேற்றபோதிலும்கூட சில குறைகளைச் சுட்டிக்காட்டினார்கள். இந்த நிகழ்ச்சி நடைபெற்றதும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களையும் மற்றும் அதிகாரிகளையும் தொடர்பு கொண்டு தகவல் கொடுத்துவிட்டு, அங்கு சென்று பார்த்தேன். அதிகாரிகள் போர்க்கால அடிப்படையில் அந்தக் கிராமங்களில் முகாமிட்டு பணிபுரிந்ததை நேரிலேயே கண்டேன். மக்கள் மிகுந்த நம்பிக்கையோடு கலைஞர் அரசைப் பாராட்டினார்கள். முந்தைய அரசு அறிவித்த திட்டத்தினை நிறைவேற்றாத காரணத்தால்தான் இப்போது இந்த மீனவ மக்கள் வீடுகளை இழந்து தவிக்கிறார்கள். அதிகாரிகள் துரிதமாகப் பணிகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்து இவ்வளவு வேகமாக, விரைவாக நடவடிக்கை எடுத்திருக்கின்ற கலைஞர் அவர்களைப் பாராட்டி, வீடிழந்து தவிக்கின்ற மீனவ மக்களுக்கு நடப்பு ஆண்டில் 4000 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதில் இவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்துல் நாசர்.

திரு. அ.வ. அப்துல் நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்படுகின்ற கடல் அரிப்பைப் போல நாகை-காயிதே மில்லத் மாவட்டம், பூம்புகார் பகுதியும் கடலால் அரிக்கப்பட்டு, பூம்புகார் பகுதியின் சுற்றுலாத் தலத்தில் இருக்கக்கூடிய நினைவுச் சின்னங்கள் எல்லாம் இன்று

பொலிவிழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கொண்டுள்ள தடுப்புச் சுவர் நடவடிக்கைகள் பூம்புகார் பகுதியிலும் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற குறிப்பில் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.43,500 கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தொகையை அதிகப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா? விளவங்கோடு தாலுக்காவிற்கு உட்பட்ட நீரோடித்துறை கிராமத்தில் 210 மீட்டர் நீளத்திற்கு தடுப்புச் சுவர் எப்போது கட்டப்படும்? இது டெம்பரரி தடுப்புச் சுவர் என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார்கள். மண்டைக்காட்டுபுதூர் கிராமத்தில் ஒரு வார காலத்தில் தடுப்புச் சுவர் கட்டப்படும் என்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அங்கு தடுப்புச் சுவர் கட்டப்பட்டுவிட்டதா? ஆகவே, டெம்பரரியாக இல்லாமல் ஒரு மாஸ்டர் பிளான் தயாரித்து, ரூபாய் அதிகமாகச் செலவானாலும்கூட, காலம் கடந்தாலும்கூட, அடிக்கடி இப்படி கடல் கொந்தளிப்பு வருகின்ற காரணத்தால், நிரந்தரமாக தடுப்புச் சுவர் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ரூ.26,000 செலவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் மீன்வளத் துறையிடம் நிலத்தினை ஒப்படைத்தால் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நிலத்தை மீனவர்கள் மீன்வளத் துறையிடம் ஒப்படைப்பு செய்ய என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுபபினர் திரு. மணி அவர்கள்

பேசும்போது 'பெட்டிஷன் கமிட்டி' என்று குறிப்பிட்டார்கள். அது உறுதிமொழிக் குழு. நாங்கள்தான் சென்றோம். அப்போது அவரும் வந்திருந்தார். ஏற்கெனவே இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தை அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் இதுவரையில் பயன்படுத்தி அங்கே தடுப்புச் சுவர் கட்டுவதாகத் தகவல் தெரிவித்தவுடன், மாவட்ட ஆட்சித் தலைவருடன் அங்கு சென்று பார்வையிட்டபோது, அந்த இடத்திலே எந்தவிதமான வேலைகளும் துவங்கப்படவில்லை என்பதும், உண்மைக்குப் புறம்பான செய்தியை அதிகாரிகள் தெரிவித்திருந்தார்கள் என்பதும் தெரிய வந்தது.

ஆண்டுதோறும் இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. மீன்வளத் துறையைச் சேர்ந்தவர்கள் அந்த நேரத்திற்கு மட்டும் நடவடிக்கை எடுத்து பரிகாரம் கொடுக்கலாமே தவிர, நிரந்தரமாகப் பரிகாரம் காண பொதுப்பணித் துறை மற்றும் சம்பந்தப்பட்ட துறையைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேர்களும் ஒன்றாகச் சேர்ந்து, இதற்காக அதிகமான பணத்தை ஒதுக்கீடு செய்து நிரந்தரமான தடுப்புச் சுவர் கட்ட வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் நீரோடித்துறை கிராமமாக இருந்தாலும் சரி, மண்டைக்காட்டுபுதூர் கிராமமாக இருந்தாலும் சரி, வருங்காலத்தில் பாதிக்கப்படாமல் இருக்கும். நிவாரணமாக ரூ.43,500 மட்டுமே வழங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட 150 வீடுகள் இந்த நிகழ்ச்சியிலே மூழ்கிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. 100-க்கும் மேற்பட்ட வீடுகள் பாதிக்கப்பட்ட அந்த இடத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை மிகவும் குறைவானதாக இருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் மீன்வளத் துறையோடு, பொதுப்பணித் துறை மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளெல்லாம் இணைந்து தொகையை அதிகமாக ஒதுக்கீடு செய்து நிரந்தரமாக தடுப்புச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா, மீனவர்களைக் காப்பாற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் இதுபோன்ற கடல் அரிப்புகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை அறிந்து, ஒரு வாரத்திற்குள் அங்கு பொதுப்பணித் துறையாலும் வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று, ரூ. 8

1996 ஆகஸ்ட் 10] [திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்]

கோடி மதிப்பீட்டில், கூடிய விரைவில்--சென்ற அரசைப் போல் இல்லாமல்-- இந்த அரசு அந்த வேலைகளை நிச்சயமாக நிறைவேற்றும்.

முற்பகல் 11-00

மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள், வீடுகள் கட்டித்தரப்படுமா என்று கேட்டார்கள். நிச்சயமாக, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு முன்னுரிமை அளித்து, நடப்பாண்டில் வீடுகள் கட்டித்தரப்படும். கடல் எல்லையைவிட்டு 200 மீட்டர் தள்ளியே வீடுகள் கட்டித்தரப்படும். காரணம் என்னவென்றால், அடிக்கடி கடல் அரிப்பின் காரணமாக அந்த வீடுகள் சேதம் அடைகின்றன. ஆகவே, 200 மீட்டர் தள்ளியே அந்த வீடுகள் கட்டித் தரப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற அரசைப்போல் இல்லாமல், மீனவர்கள் மேல் அதிக பற்று கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மீனவர்களுக்கு ஏற்படும் சம்பவங்கள் குறித்தும், அவர்களுக்கு அளிக்கவேண்டிய நிவாரணங்கள் குறித்தும் அடிக்கடி தொடர்பு கொண்டு, கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ரூ.43.50 ஆயிரம் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது நிச்சயமாக, அவர்களுடைய உடனடி நிவாரணத்திற்கே தவிர, அவர்களுக்கு அளிக்கப்படும் நிரந்தர நிவாரணத்திற்கு அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

தொகுப்பு வீடுகள் கட்ட ஜே.வி.வி.டி. திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் நிதியுதவியை உயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து சிறப்புக் கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். காந்தி, திரு. சி. ஞானசேகரன், திரு. ஆர். சொக்கர் ஆகியோர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருள் குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி.